# குளியாப்பிடிய நகர சபை
# குருநாகல் மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் குளியாப்பிடிய நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு கொள்கைகள்

முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்கீடு செய்யும் கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2004 ஆம் ஆண்டின் போது ரூபா 91,335 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த புல் வெட்டும் இயந்திரத்துடன் கூடிய கை உழவு இயந்திரத்தின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு விசேட கணக்கின் காசேட்டின் மீதி ரூபா 11,987,227 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 11,914,628 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டிற்கான இறுதியில் 05 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்கள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் காணப்பட்ட மீதி தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய இடையே ரூபா 2,832,034 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது.

#### 1.3.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 90,969,435 தொகையான கிடைக்க வேண்டிய கணக்குகளில் ரூபா 2,542,066 இற்குரிய

காலப்பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் ரூபா 29.2 மில்லியன் ஒராண்டிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 71,702,489 தொகையான செலுத்த வேண்டிய கணக்குகளில் ரூபா 10.7 மில்லியன் ஒராண்டிற்கு மேற்பட்ட காலமாக தீர்வுசெய்யப்பட வேண்டிய மீதிகளாக இருந்தது.

**1.3.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 14,696,284 ஆன 02 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது.

**1.3.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நிதிப்பிரமாணம் 571 (1)(2)(3) | 4,413,426 | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐ.ஏ.ஐ 2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | 2,545,667 | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 60,375,416 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 56,548,493 ஆக காணப்பட்டது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 | ரூபா. 000 |
| (i) | வீதவரி மற்றும் வரி | 15,034 | 15,370 | 12,229 | 13,309 | 14,984 | 793 | 16,044 | 11,853 |
| (ii) | வாடகை | 15,702 | 15,810 | 3,230 | 590 | 14,560 | 14,372 | 9,544 | 3,049 |
| (iii) | அனுமதிப்பத்திர கட்டணங்கள் | 15,455 | 16,079 | 16,079 | - | 15,478 | 16,224 | 2,092 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 110,722 | 118,105 | 85,160 | 77,070 | 26,357 | 125,939 | 16,980 | 63,066 |
| | | 156,913 | 165,364 | 116,698 | 90,969 | 71,379 | 157,328 | 44,660 | 77,968 |

குறிப்பு

kPsha;thz;by; சேகரிக்கப்பட்ட வருமானத்தில் ஆண்டின் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முன்னைய ஆண்டுகளின் நிலுவை வருமானத்தின் அறவீடுகள் ரூபா 08 மில்லியன் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

மீளாய்வாண்டில் பட்டியலிடப்பட்ட ரூபா 165 மில்லியனில் மற்றும் முன்னைய ஆண்டின் நிலுவையான ரூபா 77 மில்லியனில் மீளாய்வாண்டின் போது மொத்தம் ரூபா 116 மில்லியன் அறவிடப்பட்டிருந்தது, முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 77 மில்லியனான நிலுவை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 90 மில்லியன் வரை அதிகரித்திருந்தது.

**2.2.3 வீத வரி**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,285,262 ஆன நிலுவை வீதவரி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,755,408 ஆக இருந்தது.

(ஆ) வீதவரி கணக்கீடு செய்வதற்காக பயன்படுத்தப்படும் மென்பொருளில் காணப்பட்ட பலவீனங்கள் காரணமாக வீதவரி பதிவேட்டில் இல்லாத இலக்குகளுக்கு பட்டியலிடல், பதிவேட்டில் காணப்படும் இலக்கங்களுக்கு பட்டியலிடாமை மற்றும் நிலுவை வீதவரி தொடர்பாக காலப்பகுப்பாய்வினை பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் காணப்பட்டன.

**2.2.4 வாடகை**

வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமான 06 சொத்துக்களிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 590,587 அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் முறையே ரூபா 15,333 உம் ரூபா 15,872,720 ஆக இருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகநலன், வசதி மற்றும் நலன்புரி போன்ற சபையால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

**(அ) உப விதிகள்**

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் ஆவது பிரிவின் கீழ் 15 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 04 விடயங்களுக்காக மாத்திரம் உபவிதிகள் பிறப்பிக்கப்பட்டிருந்ததுடன் 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளுராட்சி மன்ற நிறுவனங்கள் தொடர்பான நிறைவேற்றப்பட்ட உப உறுப்புரைகள் சபையால் பின்பற்றப்பட்டிருந்தன.

**(ஆ) எதிர்பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்ளாமை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 1,500,000 செலவிடப்பட்டிருந்த நீர்த்தாங்கி பள்ளபிட்டிய பொது காணியின் வீடுகளுக்காக நீரை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(ii) மீளாய்வாண்டில் மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியத்தின் கீழ் ரூபா 1,051,444 செலவிடப்பட்டு திண்மக்கழிவுப்பொருள் முகாமைத்துவ நிலையத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த விசிரி நீர் குழாய் முறைமை வேலை நிறைவுபெற்ற 2017 இன் இறுதியிலிருந்து செயலற்று காணப்பட்டது.

**(இ) எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டத்தை பெற்றுக்கொள்ளாமை**

2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,175,000 செலவிடப்பட்டு புனரமைக்கப்பட்டிருந்த மல கழிவுப்பொருள் பிரிவு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 06 ஏக்கர் அளவான திண்மக்கழிவுப்பொருள் நிலையம் அமைந்திருந்த காணி சபைக்கு பொறுப்பேற்கப்படாதிருந்ததுடன் 2016 ஆம்ஆண்டில் அங்கு வெவ்வேறு கட்டிடங்கள் நிர்மாணிப்பதற்காக் ரூபா 41,127,295 செலவிடப்பட்டிருந்தன.

(ii) நாளொன்றுக்கு 07 தொன் அளவில் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவத்திற்காக 55 சுகாதார தொழிலாளர்கள் சேவையில்

ஈடுபடுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் வரை 106,945 கிலோ கிராம் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டிருந்தன.

(iii) மீளாய்வாண்டிற்காக கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்காக மீண்டெழும் செலவினம் ரூபா 21,825,917 ஆக இருந்த போதிலும் சேதனப் பசளை உற்பத்தி போதியளவில் இல்லாமை, உக்காத கழிவுகளை மீள்சுழற்சி செய்யும் சிக்கல்கள், மல கழிவுப்பொருள் பிரிவு முறையாக செயற்படாமை மற்றும் உயிரியல் வாயு முறைமை ஊடாக போதியளவு பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமை போன்ற நிலைமையொன்று காணப்பட்டது.

**(உ) சுற்றாடல் சிக்கல்கள்**

---

குளியாப்பிட்டி திண்மகழிவுப்பொருள் நிலையம் 2018 மே 18 ஆந் திகதிய பரிசோதனையின் போது நிலைய வளவில் பன்றிகள் கொல்லும் இடம் மற்றும் அதனுடன் அண்மித்த சூழல் அதிக துர்நாற்றத்துடனான நிலைமையொன்றில் காணப்பட்டது. அத்துடன் கழிவு நீர் மற்றும் கழிவு நீர் வடிந்து செல்வதற்கு முறயையான வடிகாண் முறையொன்றும் குழியொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. அறுக்குமிடத்தில் மலக் கழிவுகள் சுத்திகரிப்பு அலகொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் மழை காலங்களில் சுத்திகரிப்பு தாங்கி நிரம்பி வழிந்தோடியது.

**(எ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்**

---

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாகஊடகங்களின் மூலம் சபை தெரிந்துகொண்டிருந்த போதிலும் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவது தொடர்பான உள்ளக சுற்றறிக்கை மற்றும் வழிகாட்டல்களை வழங்கியிருக்கவில்லை.

**3.2 மனித வள முகாமைத்துவம்**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளில் முறையே 01, 21 மற்றும் 19 என வெற்றிடங்களும் இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலைகளில் 20 ஊழியர்கள் மிகையும் காணப்பட்டன. 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நிரந்தரமாக்கப்பட்ட 10 பேர் குறித்துரைக்கப்பட்ட கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 நவம்பர் 12 ஆந் திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு முரணாக தகைமைகள் பூர்த்தி செய்திராத 06 ஊழியர்களுக்கு சேவை நிரந்தரம் வழங்கப்பட்டிருந்தன.

**3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

---

சபைக்குச் சொந்தமான 229 கடைகள் உடன்படிக்கைகள் இல்லாமல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 03 சொத்துக்கள் மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்களை பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பாடமை**

மீளாய்வாண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 140 சொத்து விடயங்களுக்குரிய 1,245 அளவிலான பொருட்கள் பதிவேடுகளுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்படாமை**

சபைக்குச் சொந்தமான ரூபா 5,806,850 கூட்டுப்பெறுமதியான பொப் கெட் இயந்திரமொன்றும் வீதிப் பதப்படுத்துதல் இயந்திரமொன்றும் முறையான உறுதிப்படுத்தலொன்று இல்லாமல் வெளி நிறுவனங்களில் நிறுத்திவைகக்ப்பட்டிருந்தன.

**3.4.3 பயன்படுத்தப்படாத மற்றும் விளைவற்ற சொத்துக்கள்**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 77,357,900 தொகையான 05 சொத்து விடயங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 01 சொத்து, 02 ஆண்டுகள் முதல் 24 ஆண்டுகள் வரையான காலம் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.4.4 வருடாந்த பொருள் / இருப்பு பரிசோதனை**

பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இருப்பு கட்டுப்பாட்டின் போது இடம்பெறும் 23 தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டு அத்தவறுகளை குறைத்துக்கொள்வதற்காக 17 முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பரிகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

சபையின் 07 காவலாளிகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கையில் சபைக்கு பாதுகாப்பு சேவையை பெற்றுக்கொள்வதற்காக தனியார் பாதுகாப்பு சேவைகள் நிறுவனமொன்றுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2,574,414 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**3.6 வாகனப் பயன்பாடு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 செப்தம்பர் மாதத்தின் போது செயலற்றிருந்த வீதி அதிர்வு இயந்திரத்தை பழுதுபார்ப்பதற்காக இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரையின்றி இரண்டு சந்தர்ப்பங்களில் ரூபா 508,786 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 40 இயந்திர மணித்தியாலங்கள் சேவை காலத்தின் பின்னர் வீதி அதிர்வ இயந்திரம் செயலற்று இருந்ததுடன ˙பதிவு செய்யப்படாத தனியார் நிறுவனமொன்றுக்கு திருத்த வேலைகளுக்காக ரூபா 1,011,000 கையளிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மே 18 ஆந் திகதி வரை குறித்த உபகரணங்கள் கராஜில் பகுதிகளாக கலட்டப்பட்டு பாதுகாப்பற்ற வகையில் காணப்பட்டன.

(ஆ) சபைக்குச் சொந்தமான பொப் கெட் இயந்திரத்தின் 13 விடயங்களை திருத்தம் செய்வதற்கு மீளாய்வாண்டின் போது இயந்திர பொறியியலாளரின் பரிந்துரையின்றி ரூபா 317,140 செலவிடப்பட்டிருந்தது. எனினும் இத்திருத்தம் குறித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் இடம்பெறாதிருந்ததாக குறிப்பிட்டு அவ்வியந்திரம் வேறொரு தனியார் கராஜொன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

**3.7 பெறுகை**

**3.7.1 பெறுகை திட்டம்**

ரூபா 2,000,000 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வாரச்சந்தையின் சுவர் மற்றும் கடைகளின் கூரை உரிய நியமத்தின் பிரகாரம் காணப்படவில்லை.

## 4. நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கு இடையே 06 செலவின விடயங்களில் 20 சதவீதம் முதல் 74 சதவீதம் வரையான விலகல் காணப்பட்டது.

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டின் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளில் நாளதுவரையாக பேணப்படாமை. |
| (ஆ) சொத்துக்கள் / ஆதனங்கள் | (i) பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை<br>(ii) பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை |
| (இ) இருப்பு | (i) பதிவேடுகளுக்கு உட்படுத்தாமை<br>(ii) முறையற்ற இருப்புக் கட்டுப்பாடு |
| (ஈ) கடன்பட்டோர்∴கடன்கொடுத்தோர் | (i) அட்டவணைகள் தயாரிக்கப்படாமை<br>(ii) காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை<br>(iii) நீண்டகாலம் காணப்படும் மீதிகளை தீர்வுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை |
| (உ) ஊழியர் முகாமைத்துவம் | வெற்றிடங்களை நிரப்பாமை |
| (ஊ) செயற்திட்டங்கள் /ஒப்பந்தங்கள் | பாதீடு செய்யப்படாத செயற்திட்டங்களை நிறைவேற்றுதல் |